# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,814 — 1959 ජූලි 24 වැනි සිකුරාදා — 24.7.1959

11,814 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆடி மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதனவிற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 630 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## துணைவிதிகள்

### கிராம சமுதாயச் சட்டம்

கிராம சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்து மானிப்பாய்க் கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ " கெசெற் " றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவின் (3) ம் உட்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதி.

வீ. சீ. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்.
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆு ஆடியீ 2 ந் ட.

#### உபவிதி

யாழ்ப்பாணத்துக் கிராமச்சங்கங்கள் சிலவற்றால் ஆக்கப்பட்டு, 1940 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ந் திகதி, வெளியான 8,697 ம் இலக்க " கெசெற் " றில் பிரசுரிக்கப்பட்ட வாகன, மிருக வரி பற்றிய உபவிதிகள், மானிப்பாய்க் கிராமப் பகுதியைப் பொறுத்த மட்டில், அவற்றின் அட்டவணைக்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய அட்டவணையை வைப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

#### அட்டவணை

| | |
|---|---|
| பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வாகனம் ஒவ்வொன்றுக்கும் | கி. ச. மா. வா. |
| சகல இன இரட்டைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் ... | கி. ச. மா. இ. வ. |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | கி. ச. மா. ஒ. வ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. | கி. ச. மா. றி. |
| துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும் .. | கி. ச. மா. து. |

---

### கிராம சமுதாயச் சட்டம்

கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 198) 49 ம் பிரிவின்படி மட்டக்களப்பு மாவட்டத்து கோறளை மத்திய கிராமப் பகுதியின் கிராமச் சங்கம் ஆக்கியதும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ " கெசெற் " றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் அங்கீகரித்தது மான உபவிதிகள்.

வீ. சீ. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்.
உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஆு ஜூலைமீ 2 ந் ட.

#### அபாயமான, தீங்கான வியாபாரங்கள் பற்றிய உபவிதிகள்

1. கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) வைக்கோல் சேகரித்து வைத்தல் ;

(ஆ) வெட்டுமரக்கடை அல்லது விறகுக்கடை வைத்தல் ;

(இ) மண்ணெண்ணெய்க்கடை வைத்தல் ;

(ஈ) ஆபரணங்கள் செய்தல் ;

(உ) கொல்லுலை வைத்தல் ;

(ஊ) அச்சகம் வைத்தல் ;

(எ) " கபூக்கல் ", பொடிக்கல் அல்லது கருங்கல் தோண்டுதல் ;

(ஏ) குழி வெட்டி முதிரைக்கல் தோண்டுதல் ;

(ஐ) நெற் குத்தும் ஆலை அல்லது அரைக்கும் ஆலை வைத்தல் ;

(ஒ) இயந்திரத்தால் மிளகாய் அல்லது கறிச்சரக்குகள் அரைத்தல் ;

(ஓ) இயந்திரத்தால் அல்லது செக்கால் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் வடித்தல் ;

(ஔ) எண்ணெய் அல்லது வேறு எரிபொருள் அல்லது நீராவி அல்லது மின்சக்திகொண்டு இயங்கும் இயந்திரம் பாவிக்கப் படும் வியாபாரம் எதுவும் ;

(க) மரம் அரிகுழி வைத்தல் ;

(கா) தச்சுத் தொழில் மடுவம் வைத்தல் ;

(கி) மோட்டார் வாகனங்கள் அல்லது துவிச்சக்கர வண்டிகள் செப்பனிடும் வேலைத்தலம் வைத்தல் ;

(கீ) தேங்காய்த் துருவல் செய்தல் ;

(கு) கரி சேகரித்து வைத்தல் ;

(கூ) பருத்திப் பஞ்சு சேகரித்து வைத்தல் ;

(கெ) தும்பு செய்தல் அல்லது சேகரித்து வைத்தல் ;

(கே) மின்னரம் பாடம்பண்ணல் அல்லது சேகரித்து வைத்தல் ;

(கை) தேயிலை அல்லது றப்பர் உற்பத்திச்சாலை வைத்தல்.

2. கீழ்க்காணும் வியாபாரங்கள் தீங்கான வியாபாரங்களாகக் கருதப் படும் :—

(அ) பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல் ;

(ஆ) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தின்பொருட்டு அழுகிக் கெடும் உணவுப் பொருட்கள் அல்லது பதார்த்தங்கள் சேகரித்து வைத்தல் ;

(இ) பசளை அல்லது செயற்கை உரம் செய்தல் ;

(ஈ) விளக்கிரி (காடி) செய்தல் ;

(உ) சவர்க்காரம் செய்தல் ;

(ஊ) தோல் பதனிடுஞ்சாலை வைத்தல் ;

(எ) பாக்கு பாடம்பண்ணல் ;

(ஏ) இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல் ;

(ஐ) பாணி காய்ச்சுதல் ;

(ஒ) கள் சேர்க்கும் நிலையம் வைத்தல் ;

(ஓ) சுருட்டு, " சிகரெட் " அல்லது பீடி சுற்றுதல் ;

(ஔ) பலகை பாடம்பண்ணல் அல்லது வெட்டுமரம் பக்குவம்செய்தல் ;

(க) மூன்று மூடைகளுக்கு அதிகமாக தோல், எலும்புகள், சுண்ணும்பு, செயற்கை உரம் அல்லது செயற்கை உரம் செய்வதற்குப் பாவிக்கும் பொருட்கள் சேகரித்து வைத்தல் ;

(கா) புகையிலை பாடம்பண்ணல், உலர்த்தல் அல்லது சேகரித்து வைத்தல் ;

(கி) கோடா காய்ச்சுதல் ;

(கீ) மீனுக்கு " ஐஸ் " போட்டுவைத்தல் ;

(கு) கொப்பரா செய்தல் அல்லது சேகரித்து வைத்தல் ;

(கூ) ரப்பர் சேகரித்து வைத்தல், பாடம்பண்ணல் அல்லது செய்தல் ;

(கெ) " ஷீட் " அல்லது கிரேப் ரப்பர் செய்தல் அல்லது புகைபோடுதல்.

3. கீழ்க்காணும் வியாபாரங்கள் அபாயமான, தீங்கான வியாபாரங்களாகக் கருதப்படும் :—

(அ) செங்கற்கள் அல்லது ஓடுகள் செய்தல் ;

(ஆ) சுண்ணும்பு சுடுதல், சேகரித்து வைத்தல், பாடம்பண்ணல் அல்லது தகர்த்தல் ;

(இ) மின்குளங்களில் மின்சக்தி நிரப்புதல் ;

(ஈ) தும்புக்கு சாயமேற்றுதல் ;

(உ) சிரட்டைக்கரி சுடுதல்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.